# 2012

# ஆண்டு அறிக்கை

## அரசகரும மொழிகள் ஆணைக்குழு

4ஆம் மாடி

“பாஷா மந்திரய”

341/7 , கோட்டே வீதி

இராஜகிரிய.

**தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர்**

**கௌரவ வாசுதேவ நாணயக்கார அவர்கள்**

**கௌரவஅமைச்சர் அவர்களே!**

**அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் சட்டத்தின்**
**32ஆவது உறுப்புரைக்கேற்ப**

**2012 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து**
**2012 டிசம்பர் 31ஆம் திகதி வரையான**
**காலத்துக்குரியஆண்டு அறிக்கை**
**தங்களின் ஊடாக**
**இலங்கை ஜனனாயக சோஷலிசக் குடியரசின்**
**பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்**

**இங்ஙனம்**

**உண்மையுள்ள,**

**நிமல் ஆர். ரணவக்க**

**தலைவர்**

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு**

**2012 ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை**

அரசகரும மொழிகள் ஆணைக்குழு இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் அரசியல் யாப்பில் IV ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்படுகின்றதா என்பது தொடர்பில் ஆராய்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்காக 1991 ஆம் ஆண்டு 18ம் இலக்க கொண்ட அரசகரும மொழிகள் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைய தாபிக்கப்பட்ட நிலையியற் சபை நிறுவனமாகும்.

## 01.எமது எதிர்கால தொலை நோக்கு

ஆணைக்குழுவுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள கட்டளையாக அமைவது அரசினால் அரசகரும மொழிகள் மற்றும் இணைப்பு மொழிப் பயன்பாடு தொடர்பில் நிலையியற் சபை ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படுகின்றதா என்பதனை மேற்பார்வை செய்தல், மற்றும் கண்காணிப்பது, அவ்வாறு பின்பற்றுவோருக்கு பொறுப்பாக செயற்படுவதற்காக தேவையான செயற்பாடுகள் குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குவதும், அவ்வாறு பின்பற்றப்படுவதனை தெரிந்தே தவிர்ப்பதாயின் அல்லது உரியவாறு பயன்படுத்தாது இருப்பின் அதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு எதிராக தண்டனைச் சட்டக் கோவையினை அமுல்படுத்தல். மேலும் தமது மொழி உரிமை மீறப்பட்டுள்ளதாக அல்லது மீறுவதற்கு வாய்ப்பு இருப்பதாக நம்பும் நபரினால் முறைப்பாடுகளை ஏற்றுக் கொண்டு விசாரணைகளை மேற்கொள்வதும் அவர்களுக்கு அரசகரும மொழி ஆணைக்குழு சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைய நிவாரணம் வழங்குவதும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளாகும்.

## 02. எமது செயற்பாடு

உரிய எந்தவொரு தினத்திலும் உரிய எந்தவொரு இடத்திலும் எந்த ஒரு பிரஜையுடனும் அரசகரும மொழிகளில் ஏதேனும் ஒரு மொழி அல்லது இன்றேல் இணைப்பு மொழி மூலம் உரிய பணிகளை மேற்கொள்வதற்கான இயலுமை கொண்ட உத்தியோகத்தர்களை கொண்ட அரச சேவையினை உருவாக்குவதாகும்.

## 03. நோக்கங்கள்

### ஆணைக்குழுவின் பொதுவான நோக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளவாறாகும்

அ) அரசகரும மொழிப் பயன்பாடு தொடர்பாக கொள்கை அடிப்படையிலான மூல அம்சங்களை பரிந்துரை செய்தல் மற்றும் அரசியல் யாப்பின் IV வது வாசகத்தின் உள்ளடங்கும் ஒழுங்கு விதிகளுக்கமைய செயற்படுகின்றமை தொடர்பில் விழிப்புடன் மேற்பார்வை செய்தல்.

ஆ) (இதற்கு பின்னர் ''உரிய மொழி'' எனக் கருதப்படுவது) அரசியல் யாப்பின் 18 வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிப்பயன்பாடு, அரசியல் யாப்பின் IV வது வாசகத்திற்கு அமைய இடம்பெறுவதாக பொறுப்பு கூறுவதற்காகத் தேவையான சகல செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை எடுத்தல்.

இ) அரசகரும மொழி மதிப்பீட்டினை ஊக்குவித்தல் மற்றும் அவற்றின் தராதரம், சமநிலை மற்றும் பயன்பாடு உரிமைகளைக் கௌரவித்தல், முன்னெடுத்தல்.

ஈ) தமது செயற்பாடுகள் மூலம் பெறப்படும் முறைப்பாடுகளுக்குப் பதிலழிக்கும் வகையில் இரு முறையிலான விசாரணைகளை நடாத்தல் மற்றும் இச்சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

## 04. பிரதான விடயங்கள்

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஆணைக்குழு பிரதான பணிகள் நான்கு மேற்கொள்ளப்படுகின்றது.

1. கொள்கை அடிப்படையிலான மூல அம்சங்களை வகுத்தல் - ஆலோசனை
2. அரசகரும மொழிப் பயன்பாடு தொடர்பாக அரசியல் யாப்பின் ஒழுங்கு விதிகள் அரச செயற்பாடுகள் ஊடாக உரியவாறு பின்பற்றப்படுகின்றதா என்பது குறித்து - மேற்பார்வை
3. உரிய மொழியின் அந்தஸ்து மற்றும் பயன்பாடு தொடர்பான - கற்கை
4. அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள மொழி உரிமைகள் மீறப்படுகின்றமை தொடர்பான முறைப்பாடுகள் - விசாரணை

## 05. ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு

அ) (i) அரசகரும மொழிகள் ஆணைக்குழு அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவது அதிமேன்மை தங்கிய ஜனாதிபதியினால்

(ii) தற்போதைய ஆணைக்குழு 2011.08.16ம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மூன்று ஆண்டுகளுக்காக நியமிக்கப்பட்டது.


(iii) 2011.08.16 ம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு கீழ் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்களை கொண்டமைந்துள்ளது.

| | | |
|---|---|---|
| 1. திரு. நிமல் ஆர். றணவக்க, சட்டத்தரணி | தலைவர் | 2012.01.01 – தொ. 2012.12.31 |
| 2. திரு. நீல். டயஸ் சட்டத்தரணி | அங்கத்தவர் | 2012.01.01 – தொ. 2012.12.31 |
| 3. கலாநிதி. சுனில் பீ.டப். பெர்ணாந்து | அங்கத்தவர் | 2012.01.01 – தொ. 2012.12.31 |
| 4. பேராசிரியர். பீ. பாலசுந்தரம்பிள்ளை | அங்கத்தவர் | 2012.01.01 – தொ. 2012.12.31 |
| 5. திரு. திஸ்ச. டி சில்வா | அங்கத்தவர் | 2012.01.01 – தொ. 2012.12.31 |
| 6. ஜனாப் எம்.ஐ.எம். மொகைதீன் | அங்கத்தவர் | 2012.01.01 – தொ. 2012.12.31 |

திரு.ஜே.சீ றனேபுர இலங்கை நிர்வாக சேவையில் IIம் வகுப்பு 2012.09.01ம் திகதி தொடக்கம் 2012.08.29ம் திகதி வரை அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் உத்தியோக பூர்வ அதிகாரத்தின் மூலம் நியமனம் பெற்று செயலாளராக செயற்பட்டார்.

திரு. ஜே.டீ.சி ஜயசிங்க இலங்கை நிர்வாக சேவையில் Iம் வகுப்பு 201.09.11ம் திகதி தொடக்கம் 2012.12.31ம் திகதி வரை அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நியமனம் பெற்று செயலாளராக செயற்பட்டார்.

## அ) 2012.12.31 திகதி அன்று அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு




☼ அரசகரும மொழி ஆணையாளரின் உத்தியோபூர்வ அதிகாரத்தின் மூலம் ஆணைக்குழு சபையின் செயலாளராகுதல்.

△ அண்மித்த மேற்பார்வைக்காக நியமிக்கப்பட்டுள்ளது.

★ வெற்றிடங்கள்

**ஆ) பணிக்குழு**

**2012.12.31 திகதியளவில் ஆணைக்குழு சபையில் சேவையாற்றிய பணிப்பாளர் சபை**

| | உத்தியோகபூர்வ பெயர் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உண்மையான ஊழியர் எண்ணிக்கை | கூற வேண்டிய விடயங்கள் |
|---|---|---|---|---|
| 01. | உதவிச் செயலாளர் | 01 | 00 | வெற்றிடம் - 01 |
| 02. | மொழி உத்தியோகத்தர் (மும்மொழி) மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 01 | 00 | வெற்றிடம் - 01 |
| 03. | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | |
| 04. | நிதி உதவியாளர் | 01 | 01 | |
| 05. | இணைப்பு உதவியாளர் | 08 | 03 | வெற்றிடம் - 05 |
| 06. | பிரதம எழுது வினைஞர் | 01 | 01 | |
| 07. | முகாமைத்துவ உதவியாளர் | 09 | 03 | வெற்றிடம் - 06 |
| 08. | மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்) | 01 | 00 | வெற்றிடம் - 01 |
| 09. | மொழி பெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) | 01 | 00 | வெற்றிடம் - 01 |
| 10. | சாரதி | 03 | 02 | வெற்றிடம் - 01 |
| 11. | பணியாளர் சபை உதவியாளர் | 03 | 03 | |
| | மொத்த எண்ணிக்கை | 30 | 14 | வெற்றிடம் 16 |

# <u>பகுதி II</u>

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் 2012ம் ஆண்டுக்காக பிரதான நான்கு பிரிவுகளுக்குரியதாக வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன பொது மக்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள், மொழி ஆய்வு மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்துதல் உட்பட சுய விசாரணைகளை மேற்கொள்ளல்.

## 06. பொது மக்களை அறிவுறுத்தல்

அரசகரும மொழிக் கொள்கை மற்றும் மொழி உரிமைகள் தொடர்பில் மக்களிடையே காணப்படும் விளக்கத்தினை விருத்தி செய்து அறிவுறுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொள்வது ஆணைக்குழு சபையின் எதிர்பார்ப்பாகும். மொழி உரிமைகள் தொடர்பில் பொது மக்களை அறிவுறுத்துவதன் மூலம் அவர்களிடம் மொழி உரிமைகளுக்கான கேள்விகளை உருவாக்குவது ஆணைக்குழுவின் நோக்கமாகும். இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அரசினால் அரசகரும மொழிக் கொள்கைக்கமைய மக்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடிய உத்தியோகத்தர்களைக் கொண்ட அரச சேவையினை உருவாக்குவதற்காக கட்டாயமாக உரிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த நோக்கினை எட்டுவதற்காக ஆணைக்குழு ஊடகங்கள் மூலம் 2012ம் ஆண்டு பொது மக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

**அச்சு ஊடக அறிவித்தல்**

இலங்கை மக்களினால் கொண்டாடப்படும் முக்கியத்துவம் வாய்ந்த விழாக்கள் மற்றும் சந்தர்ப்பங்களை கொண்ட தினத்தினை நோக்காகக் கொண்டு அச்சு ஊடகங்களில் விளம்பரங்களை பிரசுரிக்க ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது. இவ்விளம்பரங்கள் மொழி உரிமைகள் மற்றும் அரசகரும மொழிக் கொள்கைகள் தொடர்பாக அறிவுறுத்தல்களை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு வாழ்த்துச் செய்தியினை உள்ளடக்கி அச்சு ஊடகங்கள் மூலம் பல விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.






1. 2012 புத்தாண்டு விழா
2. சிங்கள, தமிழ் புத்தாண்டு விழா
3. வெசாக் உற்சவம்
4. சமூக நல்லிணக்க வாரம்
5. நத்தார் பண்டிகை
6. தீபாவளி உற்சவம்
7. ஹஜ்ஜுப் பெருநாள்
8. நோன்புப் பெருநாள்

**இலத்திரனியல் ஊடக விளம்பரம் -**

தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்கள் மூலம் ஆணைக்குழு பொது மக்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

1. சமூக நல்லிணக்க வாரத்தினை நோக்காகக் கொண்டு இலங்கை தொலைக்காட்சி ஊடாக இரட்டை மொழிப் பிரச்சார விளம்பரங்களை ஒளிபரப்பல்.
2. சமூக நல்லிணக்க வாரத்தை நோக்காகக் கொண்டு இலங்கை வானொலி ஊடாக இரட்டை மொழி விளம்பரங்களைப் பிரச்சாரம் செய்தல்.

## 07. அரச உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்

அரச மொழிக் கொள்கையினை அரச நிறுவனங்களில் அமுல்படுத்துவது தொடர்பில் அரச உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் குறித்து அறிவுறுத்துவது இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். மொழிக் கொள்கையினை அமுல்படுத்தும் போது காணப்படும் பிரயோக பிரச்சினைகளை இணங்காணுதல் மற்றும் தேவையான பரிந்துரைகளை அமுல்படுத்துவது இக் கலந்துரையாடலின் அடிப்படை நோக்கமாகும். 2012ம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்டவாறு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

i. திருகோணமலை மாவட்ட பிரதேச செயலாளர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பாளர்கள் மற்றும் வைத்தியசாலை பொறுப்பாளர்களை அறிவுறுத்துவதற்காக திருகோணமலை மாவட்ட செயலக அலுவலகத்தில் நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்
ii. மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பாளர்கள் மற்றும் வைத்தியசாலை பொறுப்பாளர்களை அறிவுறுத்துவதற்காக மட்டக்களப்பு மாவட்ட செயலக அலுவலகத்தில் நடாத்தப்பட்ட வேலைத்திட்டம்.
iii. இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், இலங்கை மூலிகை வாசனைத் திரவியங்கள் அதிகார சபை, வைத்திய விநியோகப்பிரிவு, இலங்கை மருந்து உற்பத்தியாளர் சங்கம், மருந்துக் கைத்தொழில் தொடர்பான இலங்கை சபை நிறுவனங்களின் பொறுப்பாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்.

iv. பொலிஸ் நிலையங்களில் அரசகரும மொழிக் கொள்கையினை அமுல்படுத்துவது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்.

v. தபால் முத்திரையினை மும்மொழிகளிலும் தயாரிப்பது தொடர்பில் தபால் திணைக்களத்துடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்.

vi. வீதி விளம்பரப் பலகைகளை அரசகரும மொழிக் கொள்கைக்கமைய தயாரிப்பதற்காக மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபை தலைவர்கள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை தலைவருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்.



2012.09.12ம் திகதி அரச வங்கிகளின் பிரதிநிதிகளுடன் நடாத்திய கலந்துரையாடல்

vii. அரசகரும மொழிக் கொள்கையினை அரச நிறுவனங்களில் அமுல்படுத்துவது தொடர்பில் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடல்களை நடாத்துதல்.

viii. அரசகரும மொழிக் கொள்கைகளை அரச நிறுவனங்களில் அமுல்படுத்துவதனை மேற்பார்வை செய்வது தொடர்பில அரச கணக்காய்வுப் பிரிவின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வது தொடர்பில் கணக்காய்வாளருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்.

இக்கலந்துரையாடலில் இணங்காணப்படும் அரசகரும மொழிக் கொள்கைக்கு புறம்பான நிலைமைகளை தவிர்ப்பதற்காக ஆணைக்குழுவினால் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறான பரிந்துரைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

i. மருந்துகள் தொடர்பில் நுகர்வோர் விளக்கமூட்டப்பட வேண்டிய தகவல்களை சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் குறிப்பிடல்.

ii. பொலிஸ் நிலையங்களில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் வழங்கும் முறைப்பாடுகளை பொறுப்பேற்பது தொடர்பில் சட்டமா அதிபரின் கட்டளையினை பெற்றுக் கொள்ளல். இதற்கமைய எழுத்து மூலம் முறைப்பாடுகள் தகவல் புத்தகததில் ஒட்டப்பட்டு மொழி பெயர்ப்பினை பெற்று எதிர்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

iii. தனியார் மற்றும் போக்குவரத்து சபைக்குரிய சகல பஸ் வண்டிகளிலும் பெயர்ப்பலகைகளை மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தல்.

iv. அரச வங்கிகள் மூலம் பொது மக்களுக்கு வழங்கும் சகல ஆவணங்களையும் மும்மொழிகளிலும் தயாரித்தல்.

v. அரசகரும மொழிக் கொள்கையினை அமுல்படுத்துவதற்கான இணைந்த சுற்றறிக்கையினை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக அரச நிறுவனங்களுக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

## 08. மொழி ஆய்வுகளை நடாத்துதல்.

அட்டவணை 1 – 2012 ஆம் ஆண்டில் மொழி ஆய்வுகள் நடாத்தப்பட்ட நிறுவனங்கள்.

| அரச நிறுவனங்கள் | | திகதி |
|---|---|---|
| 1 | கொழும்பு மாவட்ட செயலக அலுவலகம் | 2012.04.29 |
| 2 | தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை | 2012.03.29 |
| 3 | கம்பஹா மாவட்ட செயலக அலுவலகம் | 2012.04.30 |
| 4 | களுத்துறை மாவட்ட செயலக அலுவலகம் | 2012.05.30 |
| 5 | தொழிலாளர் திணைக்களம் | 2012.05.10 |
| 6 | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | 2012.05.10 |
| 7 | கேகாலை மாவட்ட செயலக அலுவலகம் | 2012.05.10 |
| 8 | கேகாலை பொலிஸ் நிலையம் | 2012.05.29 |
| 9 | கேகாலை வைத்தியசாலை | 2012.05.29 |
| 10 | மாவனல்ல பிரதேச செயலக அலுவலகம் | 2012.05.29 |
| 11 | மாவனல்ல பொலிஸ் நிலையம் | 2012.05.06 |
| 12 | மாவனல்ல வைத்தியசாலை | 2012.05.06 |
| 13 | போருவளை பொலிஸ் நிலையம் | 2012.06.29 |
| 14 | போருவளை மாவட்ட வைத்தியசாலை | 2012.06.29 |
| 15 | காலி பொலிஸ் நிலையம் | 2012.06.30 |
| 16 | கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை | 2012.06.30 |
| 17 | பிரதேச செயலக அலுவலகம் - அக்கரைப்பற்று | 2012.12.27 |
| 18 | பிரதேச செயலக அலுவலகம் - கல்முனை | 2012.12.27 |
| 19 | பொலிஸ் நிலையம் - அக்கரைப்பற்று | 2012.12.27 |
| 20 | பொலிஸ் நிலையம் - கல்முனை | 2012.12.28 |
| 21 | மாவட்ட வைத்தியசாலை – அக்கரைப்பற்று | 2012.11.20 |
| 22 | அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை – கல்முனை | 2012.11.20 |
| 23 | பிரதேச செயலக அலுவலகம் - அம்பாரை | 2012.11.21 |
| 24 | பொலிஸ் நிலையம் - அம்பாரை | 2012.11.21 |
| 25 | பொது வைத்தியசாலை – அம்பாரை | 2012.11.21 |
| 26 | ஆதார வைத்தியசாலை – அக்கரைப்பற்று | 2012.11.20 |
| 27 | பொது வைத்தியசாலை – பொலன்நறுவை | 2012.12.19 |
| 28 | பொலிஸ் நிலையம் - பொலன்நறுவை | 2012.12.19 |
| 29 | பிரதேச செயலக அலுவலகம் - தமன்கடுவ, பொலன்நறுவை | 2012.12.19 |
| 30 | பிரதேச செயலக அலுவலகம் - லக்காபுர | 2012.12.19 |
| 31 | பொலிஸ் நிலையம் - புலஸ்திகம | 2012.12.19 |
| 32 | பொது வைத்தியசாலை – புலஸ்திகம | 2012.12.19 |

## 09. ஆய்வுகளை நடாத்துதல்

அரசகரும மொழிக் கொள்கையினை அமுல்படுத்தும் போது காணப்படும் நிலைமைகள், பிரச்சினைகள் மற்றும் தேவைகளை இணங்காண்பதற்காக ஆணைக்குழுவினால் தேவைக்கு ஏற்றவாறு ஆய்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. 2012ம் ஆண்டில் கீழ் குறிப்பிட்டவாறு ஆய்வுகள் நடாத்தப்பட்டன.

i. கிழக்கு மாகாணத்தில் துரித மதிப்பீட்டு ஆய்வு – கிழக்கு மாகாண பொலிஸ் நிலையம், பிரதேச செயலக அலுவலகம் மற்றும் வைத்தியசாலைகளில் அரசகரும மொழிக் கொள்கையினை அமுல்படுத்துவது தொடர்பில்

ii. அரசகரும மொழிக் கொள்கை தொடர்பில் பொது மக்களிடம் காணப்படும் விளக்கத்தினை பரிசோதனை செய்வதற்காக 2012 தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக் கூடத்தில் பொது மக்கள் ஆய்வுகளை நடாத்துதல் இதில் 950 பேர் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர்.

iii. 2012 தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் அரசகரும மொழிக் கொள்கையினை தயாரிப்பது தொடர்பில் ஆய்வுகள் நடாத்தப்பட்டன. இதன்போது அரச துறையில் 390 கண்காட்சிக் கூடங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன.

iv. அரச வங்கி பொது மக்களுடன் சேவையாற்றும் போது பயன்படுத்தப்படும் ஆவணங்கள் அரசகரும மொழிக் கொள்கைக்கு அமைவானதா என்பதனை ஆய்வுக்கு உட்படுத்தல்.

கொழும்பு மாநகர சபையில் அரசகரும மொழிக் கொள்கையினை அமுல்படுத்துவது தொடர்பிலான முன்னோடி ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ் ஆய்வில் மாநகர சபைக்குரிய சகல பெயர்பலகைகள், பொது மக்கள் ஆவணங்கள், இரட்டை மொழிச் சேவையினை வழங்குவதற்குள்ள வசதிகள் மற்றும் மானிட வளம் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆய்வுகள் நடாத்தப்படவுள்ளன.

### <u>மொழி ஆய்வுகள்</u>

மொழி உரிமையினை மீறுவது தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளை ஆய்விற்கு உட்படுத்துவது ஆணைக்குழுவின் அடிப்படை பணியாகும். 2012ம் ஆண்டில் ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகள் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை IV – 2013ம் ஆண்டில் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள்.**

| | முறைப்பாடுகள் | மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் |
|---|---|---|
| 01. | தொழிலாளர் திணைக்களத்தில் தமிழ் பிரஜைகளுக்கு தமது தாய் மொழி மூலம் சேவையினை பெற்றுக் கொள்ள தேவையான வசதிகள் இன்மை. | தொழிலாளர் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் தமிழ் மொழி இயலுமை கொண்ட 19 உத்தியோகத்தர்கள் இருப்பதாகவும் 128 உத்தியோகத்தர்கள் மாவட்ட அலுவலகங்களில் சேவையாற்றுவதாகவும் வடக்கு, கிழக்கு மாகாண அலுவலகங்களில் தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்கள் சேவையாற்றுவதாகவும் தொழில் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டது. |
| 02. | கௌரவ சமூக சேவை அமைச்சரின் தலைமையில் 2011.12.03ம் திகதி கலாவெவயில் இடம்பெற்ற விழாவிற்கு வருகை தருமாறு சமூக சேவை அமைச்சின் செயலாளரினால் அனுப்பபட்டிருந்த அழைப்பிதழ் சிங்கள மொழி மூலம் மாத்திரம் இருந்தது. | அழைப்பு விடுக்கப்பட்டோரில் பொரும்பான்மையானோர் சிங்கள மொழி பயன்படுத்துபவர்கள் என்பதனால் அழைப்பிதழ் சிங்கள மொழியில் அச்சிட்ட போதிலும் தமிழ் மொழியைப் பயன்படுத்துவோருக்கான அழைப்பு விடுக்கும் போது அழைப்பிதலுடன் தமிழ் மொழி பெயர்ப்பை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இதன் பிரதியுடன் இவ் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 03. | கோட்டை பிரதேச சபை வளாகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல் பலகை மற்றும் பெயர்ப்பலகை சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | முறைப்பாடு சரியானது அல்ல என தெரிய வந்தமையினால் விசாரணைச் செயற்பாடுகள் இடம்பெறவில்லை. |
| 04. | அளவையியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் சகல வரைபடங்களும் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலம் காணப்படல் | வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் காணி வரைபடங்களை தயாரிக்கும் போது ஆங்கில மொழியைப் போன்று மட்டுப்படுத்தப்பட்ட அளவு தமிழ் மொழி மூலமும் தயாரிக்கப்படுவதாகவும் கணினி ஊடாக வரைபடங்களைத் தயாரிக்கும் போது தமிழ் எழுத்துக்களைத் தயாரிக்கும் போது தமிழ் எழுத்துக்கள் உரியவாறு மென்பொருளுடன் பயன்படுத்தும் முறையினை பரிசாத்திப்பதாக மற்றும் எதிர்வரும் காலங்களில் தமிழ் மொழி மூலமும் வரைபடங்களை தயாரிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 05. | காணி செயற்பாட்டு ஒழுங்கு விதிக்கோவை தமிழ் மொழி மூலம் வெளியிடப்படவில்லை. | இக்காணி செயற்பாட்டுக் கோவையை சமகாலப்படுத்தி மும் மொழிகளிலும் வெளியிடுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. காணி செயற்பாட்டுக் கோவைகள் கொண்ட காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் அரச காணி உரிமையினை மீளப் பெறும் சட்டம் காணியினை தீர்க்கும் கட்டளைச் சட்டம் மற்றும் உரிய சகல கோவைகளும் நிலையியற் சபை அச்சிடலாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடுவதற்கான உரிய சட்டக் கோவைகள் எந்தவொரு நபருக்கும் அறிந்து கொள்ளும் இயலுமை இருப்பதாக தொடர்ந்தும் அறிக்கைப் படுத்தப்பட்டுள்ளது. |
| 06. | தமிழ் மக்களுக்கு தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் இணைப்பு செயலாளரினால் அவ்வமைச்சின் விநியோகஸ்தர்களை பதிவு செய்வது தொடர்பில் 2011.12.02ம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் சிங்களம் மற்றும் ஆங்கில பிரதிகளை அனுப்புதல் மற்றும் சிங்கள மொழியில் கடிதம் அனுப்புதல் | உரிய பத்திரிகை அறிவித்தல் மும் மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டதாக அமைச்சின் கௌரவ அமைச்சரின் இணைப்பு செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 07. | தமிழ் மக்களுக்கு இலங்கை வங்கியிலிருந்து சிங்கள மொழி மூலம் கடிதம் அனுப்பபட்டமை | இலங்கை வங்கி முகாமையாளரினால் அக்கடிதம் தமிழ் மொழி பெயர்ப்பினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எதிர்வரும் காலங்களில் அரசகரும மொழிக் கொள்கைக்கமைய செயற்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 08. | தெஹிவளை, கல்கிஸ்ஸ மாநகர சபையினால் வெளியிடப்பட்ட ‘‘சொத்துக்களைத் தடை செய்யும் அறிவித்தல்’’ மற்றும் வரி அறவீடு தொடர்பில் சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | தெஹிவளை, கல்கிஸ்ஸ மாநகர சபையினால் வெளியிடப்படும் சொத்துக்களை தடை செய்யும் அறிவித்தல் மற்றும் நிலுவை வரிப்பண வரி அறவீட்டுக்காக பொது மக்களுக்கு வழங்கப்படும் கடிதம் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் இது பொது மக்களுக்கு வெளியிடப்படுவதாகவும் நகர ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 09. | அளுத்கம பஸ்தரிப்பு நிலையத்தில் அளுத்கம – துந்துவ ஊடாக தொட்டகனத்த என தமிழ் மொழியில் குறிப்பிட முடியாமை. | உரிய அறிவித்தல் பலகை தமிழ்மொழி மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அளுத்கம டிப்போ முகாமையாளரினால் அறிவிக்கப்பட்டது. |
| 10. | கொழும்பு மாநகர சபையினால் வழங்கப்பட்ட கட்டிட நிர்மாணிப்புக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிப்பதற்காக வழங்கப்படும் விண்ணப்படிவம் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மாத்திரம் காணப்படல். | உரிய விண்ணப்பபடிவம் மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளதாக நகர செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 11. | தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் கோட்டை பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தினால் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் நீர் கட்டணப் பட்டியல்களில் பெயரை மாற்றியமைப்பதற்கான ஆலோசனைப் படிவம் சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல் | உரிய ஆலோசனைப் படிவம் மும் மொழிகளிலும் அச்சிட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 12. | கொட்டாவையிலிருந்து பின்னதுவ வரையான கடுகதி வீதியில் காலி நுழைவாயிலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சகல அறிவித்தல்களும் சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | தென்னிலங்கை போக்குவரத்து அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மூலம் பொருத்தப்பட்டுள்ள சகல சமிஞ்ஞைகள் மற்றும் வழிகாட்டல் பலகைகள் அரசகரும மொழிக் கொள்கைக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளதாக இச் செயற்றிட்டத்தின் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது |
| 13. | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் பொது மக்களுக்கு வழங்கப்படும் மோட்டார் வாகன உரிமையினை கையளிக்கும் பதிவு செய்வது தொடர்பிலான கடிதம் சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | உரிய கடிதம் மும் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 14. | ஊழியர் சேமலாப சபையினால் வழங்கப்படும் படிவம் சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | இச்சகல படிவங்களும் தமிழ் மொழி மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு சபையின் உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட மொழி ஆய்வின் போது மேற்பார்வை செய்யப்பட்டது. |
| 15. | திம்பிரிகஸ்சியாய பிரதேச செயலக அலுவலகத்தினால் வழங்கப்படும் சிரேஷ்ட பிரஜைகள் அட்டை மற்றும் | உரிய விண்ணப்பபடிவம் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | அவ் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க வேண்டிய விண்ணப்பபடிவம் சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | |
| 16. | பொலிஸ் உத்தியோகத்தர்களின் சீருடையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய உத்தியோகத்தரின் பெயர் ஆங்கில மொழி மூலம் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. | இப் பெயர் குறிப்பு சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் தயாரிப்பதற்காக குறிப்பிட்ட காலம் கடத்தல் மற்றும் அதற்காக மேலதிக நிதி ஒதுக்கீடு ஒதுக்க வேண்டி உள்ளமையினால் அவ்வாறு செயற்படும் வரை அப் பெயர் அறிவித்தலை அணிவதை இடைநிறுத்துமாறு பொலிஸ்மா அதிபரினால் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 17. | காணி நிர்ணய திணைக்களத்தின் இரத்மலானை பிரதேச அலுவலகத்தினால் பொது மக்களுக்கு வழங்கப்படும் காணியின் அளவு மற்றும் உரிமையினை உறுதிப்படுத்துவதற்கான கடிதம் சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | அக்கடிதம் தமிழ், ஆங்கிலம் மூலம் மொழி பெயர்த்து ஆணைக்குழுவிற்கு அனுப்பபட்டுள்ளது. |
| 18. | முகத்துவார கோயில் வீதி ‘‘விகாரை வீதி’’ என்ற பெயரில் மாற்றியமைத்து புதிய பெயர்பலகை பொருத்தப்பட்டுள்ளது. | ‘‘கோயில் வீதி’’ எனப் பெயர் இட வேண்டும் என கொழும்பு மாநகர சபையின் நகரப் பொறியியல் திணைக்களத்தின் பணிப்பாளர் பொறியியலாளருக்கு ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |
| 19. | நாட்டின் பல இடங்களில் விளம்பர பலகைகள் சிங்கள மொழி மூலம் மாத்திரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. | இது தொடர்பில் ஆணைக்குழுவினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தல். |
| 20. | அரச வளம் மற்றும் கைத்தொழில் தொழில் பயிற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை பொற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கிழக்கு மாகாண திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள கிளையில் 250க்கு மேற்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் ஊழியர்கள் சேவையாற்றிய போதிலும் அதன் நிர்வாக பணிகளுக்காக தமிழ் மொழி பயன்படுத்தப்படாமை. | அந்நிறுவனத்தில் சேவையாற்றும் தமிழ் மற்றும் முஸ்லிம் ஊழியர்களின் கடமைச் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 30இற்கு அமைய ஏற்கனவே தமிழ் மொழி பெயர்ப்பு பதவி அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் அதற்கமைய ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகள் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் தமிழ் மொழி பெயர்ப்பாளர் சேர்த்து கொள்ளப்படுவதாக மற்றும் இந்நிறுவனத்தில் ஆரம்பம் தொடக்கம் இவ் ஊழியருக்காக தமிழ் மொழி பெயர்ப்புக்கள் வழங்கப்படுவதுடன் இப் |

| | | |
|---|---|---|
| | | பணியினை மேற்கொள்ளும் உத்தியோகத்தருக்கு மாதாந்த கொடுப்பனவு செலுத்தப்படுவதாகவும் இவ் அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 21. | தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நாடகம் மற்றும் திரைப்படங்களின் உரையாடல்களில் மொழி பயன்பாடு சரியான முறையில் அமையவில்லை. | முறைப்பாடுகள் தொடர்பில் உரிய தகவல்களை அறிவிக்குமாறும் முறைப்பாட்டாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு முறைப்பாட்டாளரின் வரவேற்பு கிடைக்காமையினால் எதிர்கால விசாரணைகளை மேற்கொள்ள முடியவில்லை. |
| 22. | கற்பிட்டி பிரதேச செயலக அலுவலகத்தில் மாதாந்தம் நடாத்தப்படும் பிரதேச விவசாய கூட்டத்தின் அறிக்கை வெளியிடப்படுவது சிங்கள மொழி மூலம் மாத்திரமாகும். | உரிய பிரதேச விவசாய கூட்டத்தின் அறிக்கை தமிழ் மொழி மூலம் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 23. | சுகாதார சேவைத் திணைக்களத்தினால் நோயாளர்களுக்கு வழங்கப்படும் தனியார் நோயாளர் சான்றிதழ் சிங்களம் மற்றும் ஆங்கில் மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | உரிய மாதிரிப்படிவம் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு ஆணைக்குழு சபைக்கு அதன் பிரதி அனுப்பப்பட்டுள்ளது. |
| 24. | உப்புவெளி பொலிஸ் நிலையத்தின் தகவல் புத்தகத்தின் தமிழ் மக்களின் முறைப்பாகள் சிங்கள மொழி மூலம் குறிப்பிடல் | அரசகரும மொழிக் கொள்கைக்கமைய முறைப்பாடுகளை குறிப்பிடுமாறு பொலிஸ் நிலையத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 25. | சிறைச்சாலை திணைக்களத்தின் சிறைச்சாலை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புக்காக 2012.02.12ம் திகதி நடாத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கும் நேர்முகப்பரீட்சையில் தோற்றுவதற்காக அனுப்பபட்ட கடிதம் சிங்கள மொழியில் மாத்திரம் காணப்படல். | சிங்கள தமிழ் மொழி பெயர்ப்பாளர் இன்மையினால் அக்கடிதத்தை தமிழ் மொழி மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்ப முடியாது உள்ள போதிலும் இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்காக சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 26. | முதியோருக்கு அரசினால் கடந்த வரவு செலவு திட்டத்தின் மூலம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மாதாந்தக் கொடுப்பனவு மற்றும் சமுர்த்தி கொடுப்பனவு ரூபா.1000.00 தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து செலுத்த தீர்மானிக்கப்பட்டள்ள | உரிய மாதிரிப்படிவம் சிங்களம் / ஆங்கிலம் மற்றும் தமிழ் / ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் அச்சு விண்ணப்பபடிவங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆணைக்குழு சபையினால் சகல மாதிரிப்படிவமும் ஒரே கடதாசியில் மும்மொழிகளிலும் அச்சிடுமாறு அல்லது |

| | | |
|---|---|---|
| | நிதியினை பெற்றுக் கொண்டு நிரப்ப வேண்டிய மாதிரிப்படிவம் சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலம் மாத்திரமே காணப்படுகின்றது. | தனித்தனியாக அச்சிட்டு முத்திரை பொறித்து அல்லது அச்சிட்டு ''அவ்விண்ணப்ப படிவத்தை மூன்று மொழிகளிலும் பெற்றுக் கொள்ள முடியும்'' என அவற்றின் முன்பக்கத்தில் குறிப்பிடுமாறு உரிய பொறுப்பாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. |
| 27. | பருத்தித்துறை சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தின் கடிதத் தலைப்பில் சிங்கள சொற்கள் தெளிவற்று காணப்படல் | உரிய கடிதத் தலைப்பு திருத்தியமைக்குமாறு ஆணைக்குழு சபையினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. |
| 28. | முஸ்லிம் சமய விவகார மற்றும் கலாச்சார விவகார திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பதிவு செய்யப்படுவதற்கான விண்ணப்பபடிவம் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் காணப்படல். | மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தின் பிரதியின் விளக்கத்துக்காக ஆணைக்குழு சபைக்கு அனுப்பபட்டுள்ளது. |
| 29. | காசல் வீதி மகளிர் வைத்தியசாலையில் காட்சிப்படுத்தப் பட்டுள்ள பெயர் பலகை மற்றும் அறிவித்தல் பலகைகள் அரச மொழிக் கொள்கைக்கு அமைவாக இன்மை. | உரிய பெயர்ப் பலகை மற்றும் அறிவித்தல் பலகைகளை மும்மொழிகளிலும் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 30. | நீதி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட சமாதான நீதிபதிகளுக்கு வழங்கப்படும் கடமை ஆவணங்கள் சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | உரிய ஆவணம் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு அதன் பிரதிகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பபட்டுள்ளது. |
| 31. | நீதி மன்ற ஒழுங்கமைப்பு சட்டத்தின் கீழ் புதிய நீதி மன்ற மாவட்டத்தை ஸ்தாபிப்பதனை விரிவுபடுத்தல் மற்றும் அமுல்படுத்துவது தொடர்பான சட்டம் 2010.11.10ம் திகதிய 1679/40 கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | உரிய வர்த்தமானி அறிவித்தல் மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளதாக நீதி அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 32. | 2012.08.08ம் திகதி காலை கொழும்பிலிருந்து கண்டி வரை செல்லும் சொகுசு கடுகதி புகையிரதம் அன்றைய தினம் கண்டியிலிருந்து புறப்படும் போது மற்றும் கொழும்புக்கு வருகை தரும் போது புகையிரத நிலையங்களில் தமிழ் மற்றும் ஆங்கில | புகையிரத நிலையங்களின் அறிவித்தல்கள் மும்மொழிகளிலும் மேற்கொள்ளப்படாமை தொடர்பில் புகையிரத பிரயாணிகள் மேற்கொண்ட முறைப்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக 150 புகையிரத ஊழியர்களுக்கு மும்மொழிகளிலும் அறிவுறுத்தல்களை வழங்குமாறு பயிற்சி |

| | | |
|---|---|---|
| | மொழி மூலம் அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்படாமை. | அளிப்பதற்கான வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன. |
| 33. | தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் புலர்ஸ் வீதிக்கு முன்னால் உள்ள பெயர்ப் பலகையில் தமிழ் மொழி பெயர்ப்பு இன்மை. | உரிய பெயர்ப் பலகை திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 34. | தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக தெஹிவளை பிரதேச செயலக அலுவலகத்திற்கு தமிழ் மொழி மூலம் எழுதப்பட்ட பிறப்பு சான்றிதழ் வழங்கப்பட்ட வேளையில் இதன் சிங்கள மொழி பெயர்ப்பை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. | மொழி பெயர்பாளரின் சேவையினை கோரி பொது நிர்வாக அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் தற்போது அலுவலகத்தில் சேவையாற்றும் தமிழ் மொழி மூல உத்தியோகத்தரின் சேவையினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிக்கைப்படுத்தப்பட்டது. |
| 35. | அவிசாவலை தபால் அலுவலகத்தின் கரும பீடத்திற்கு அருகாமையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகை சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | உரிய பெயர்ப்பலகை மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவிசாவலை தபால் பொறுப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 36. | பொலிஸ் அவசர அழைப்பு இலக்கம் 119 பெற்றுக் கொள்ளும் தொலைபேசி அழைப்புக்களுக்கு பதிலளிப்பதற்காக தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்கள் இன்மை. | பொலிஸ் கட்டளையிடும் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள 119 பொலிஸ் அவசர அழைப்பு மத்திய நிலையத்தில் தமிழ்மொழி மூல 10 உத்தியோகத்தர்கள் மற்றும் மொழிப் பாட நெறியினை தொடர்ந்து மொழி தேர்ச்சியினை பெற்றுள்ள 11 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் ஒழுக்காற்று மற்றும் செயற்பாட்டுப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் நாளாந்தம் பாதுகாப்பு தடவைகளுக்கமைய 08 மணித்தியாலம் சேவையாற்ற இருந்த போதிலும் எதிர்வரும் காலங்களில் பயிற்றுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கூடுதலான எண்ணிக்கையினை இப்பிரிற்கு சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 37. | ஊழியர் சேமலாப நிதிய அலுவலகத்தில் உள்ள வாடிக்கையாளர் சேவை கரும பீடங்களில் வாடிக்கையாளர்களை | புதிய இலக்கம் கோரப்படும் வேளையில் அவ்விலக்கம் காட்சிப்படுத்தப்பட்டு சமிஞ்ஞைகளை மாத்திரம் வழங்கக்கூடியவாறு இப்போது அழைப்பு முறைமையினை |

| | | |
|---|---|---|
| | அழைப்பதற்காக இலக்கங்கள் காட்சிபடுத்தப்பட்டு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இவ்வறிவித்தல்கள் ஆங்கில மொழி மூலம் மாத்திரமே காணப்படுகின்றன. | மறுசீரமைக்க நடவடிக்கை எடுப்பதாக நிதியத்தின் அதிகாரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 38. | நீதிபதிகளை அழைப்பதற்கான விண்ணப்படிவம் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் காணப்படல் மற்றும் உரிய பரீட்சை ஆங்கில மொழி மூலம் நடாத்துதல். | நீதிபதிகளை சேர்த்துக் கொள்வதற்காக பரீட்சை நடாத்துவது தொடர்பில் இதுவரையில் தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை என நீதி சேவை ஆணைக்குழு சபை செயலாளரினால் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 39. | இரத்தினபுரி மாநகர சபையின் கடிதத் தலைப்புக்கள் அரசகரும மொழிக் கொள்கைக்கு அமைவாக இன்மை. | உரிய கடிதத் தலைப்புக்கள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாக நகர ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 40. | வேலை வாய்ப்பு பொறுப்பாளர் நிதிய சபையினால் வெளிடப்படும் வருடாந்த அங்கத்துவக் கணக்கு வெளிப்பாடுகள் சிங்கள மொழி மூலம் காணப்படல். | வருடாந்த அங்கத்துவ கட்டண வெளிப்பாடுகள் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் அச்சிட்டு அதன் பிரதி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 41. | 2012.05.24ம் திகதி பி.ப. 4.00 மணி தொடக்கம் 5.00 மணி வரையான காலத்திற்குள் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்குள் எந்தவொரு புகையிரத அறிவித்தல்களும் தமிழ் மொழி மூலம் வழங்கப்படாமை. | புகையிரத போக்குவரத்து அறிவித்தல்கள் மும்மொழிகளிலும் அறிவிக்கப்படாமை தொடர்பில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதற்கு தீர்வாக 150 புகையிரத ஊழியர்களுக்கு மும்மொழிகள் மூலம் அறிவித்தல்களை வழங்குவதற்காக பயிற்சிகள் வழங்கப்பட்டன. |
| 42. | நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யும் வேளையில் அதன் தமிழ் மொழி மூலம் குறித்துக் கொள்வதை நிராகரித்தல். | சகல முறைப்பாடுகளையும் தமிழ் மொழி மூலம் குறிப்பிட்டதன் பின்னர் சிங்கள மொழிக்கு மொழி பெயர்க்கப்படுவதாகவும் நீதிமன்ற செயற்பாடுகளின் போது சகல குற்றப்பத்திரங்களும் பீ அறிக்கை ஏ அறிக்கை தமிழ் மொழி மூலம் குறிப்பிட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதாக பொலிஸ் நிலையப் பொறுப்பாளரினால் அறிவிக்கப்பட்டது. |
| 43. | நிர்மான, மானிட வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ அமைச்சுக் களுக்கிடையிலான செயற்பாட்டுக் குழுவினை தாபிக்கும் தேவை மற்றும் அதன் செயற்பாடுகளை வெளிப்படுத்துவதற்காக 2014.01.03ம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பங்கேற்பதற்காக அழைப்பு விடுத்து | அதிதிகளின் பட்டியல் மற்றும் கூட்ட நிகழ்ச்சி நிரல் இணைப்பு மொழியான ஆங்கில மொழி மூலம் அனுப்பபட்டு இருந்த போதிலும் கூட்டம் தொடர்பான விபரம் அனுப்பப்பட்டிருப்பது சிங்கள மொழி மூலமாகும். இது எவ்வாறாக இருப்பினும் எதிர்வரும் காலங்களில் அரசகரும மொழிக் கொள்கைக்கமைய அவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்வதாக |

| | | |
|---|---|---|
| | அனுப்பபட்ட அழைப்பிதழ் மற்றும் இணைக்கப்பட்டிருந்த கூட்டம் தொடர்பான விபரங்கள் சிங்கள மொழியில் மாத்திரம் காணப்படல் | அறிவிக்கப்பட்டள்ளது. |
| 44. | பாணந்துறை உதவி தொழில் ஆணையாளர் அலுவலகத்தினால் வழங்கப்படும் ஊழியர் சேமலாப நிதியத்தின் பயன்களை பெற்று கொள்வதற்கு நிரப்ப வேண்டிய விண்ணப்பபடிவம் (விண்ணப்பதாரியின் புகைப்படம் ஒட்டப்பட வேண்டும்) சிங்கள மொழி மூலம் மாத்திரம் | உரிய ஊழியர் சேமலாப நிதியத்தின் பயன்களை பெற்றுக் கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள கே மாதிரிப்படிவம் 1990ம் ஆண்டு தொடக்கம் 03 மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளதாக பயன்களை பெற்றுக் கொள்வதற்காக ஆலோசனைப் படிவம் ஏற்கனவே மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளதாகவும் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| 45. | இரத்தினபுரி நகரில் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தின் வாக்காளர்களை பதிவு செய்வதற்காக நிரப்ப வேண்டிய விண்ணப்பப்படிவம் சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | இவ்விடயத்தை திருத்தியமைத்து முறைப்பாட்டாளருக்கு கடிதம் அனுப்பப் பட்டதாகவும் எதிர்காலத்தில் அரசகரும மொழிக் கொள்கைக்கமைய செற்படுவதாகவும் இரத்தினபுரி பிரதி தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 46. | இலங்கை வைத்திய சபைக்கு கிடைக்கும் தொலைபேசி அழைப்புக்களுக்கு பதிலளிக்கும் வகையில் வழங்கப்பட்டுள்ள ஒளிப்பதிவு நடா ஆங்கில மொழி மூலம் மாத்திரம் காணப்படல். | இலங்கை வைத்திய சபைக்கு கிடைக்கும் தொலைபேசி அழைப்புக்காக வழங்கப்பட்டுள்ள மும்மொழி ஒளி நாடாவாக மாற்றியமைப்பதற்காக தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டள்ளதாக அந்நிறுவனத்தின் பதிவாளரினால் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 47. | பயங்கரவாத தடுப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் போது தமிழ் மக்களின் அறிக்கைகள் சிங்கள மொழி மூலம் பெறல் | பயங்கரவாத தடுப்புப் பிரிவினால் பூர்த்தி செய்யப்பட்ட தமிழ் மக்களின் வெளிப்பாடுகளை சிங்கள மொழி மூலம் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் வெளிப்பாடுளைப் பெற்றுக் கொள்ளும் போது மொழி பெயர்ப்பு உத்தியோகத்தர் ஒருவரின் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக பதவி நிலை பிரதி பொலிஸ்மா அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தமிழ் மக்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளை அவர்களது தாய் மொழி மூலம் குறிப்பிட்டு முறைப்பாட்டு புத்தகத்தில் ஒட்டி |

| | | |
|---|---|---|
| | | முறைப்பாட்டினை மொழி பெயர்ப்பாளர் ஊடாக சிங்கள மொழிக்கு மொழி பெயர்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 48. | பலங்கொட கல்தொட்ட வீதியில் நெடுஞ்சாலை அபிவிருத்தி அதிகார சபையின் பின்பக்கத்தில் பொருத்தப்பட்டுள்ள பெயர்ப் பலகையில் ''பலாங்கொட'' என தமிழ் மொழி மூலம் பிழையாக குறிப்பிடப்பட்டிருத்தல். | பலங்கொட நகரில் கல்தொட்ட வீதியில் நெடுஞ்சாலை அபிவிருத்தி அதிகார சபைக்கு பின் பக்கத்தில் பொருத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகையில் தமிழ் மொழியினை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளதாக பல்மடுல்ல நெடுஞ்சாலை அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளரினால் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 49. | இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் கட்டண பட்டியல்களை கால எல்லைக்குள் அறவீட்டு விபரங்கள் ஆங்கில மொழி மூலம் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. | உரிய அறவீட்டுக் கட்டணப் பட்டியல் விபரங்கள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாக மதிப்பீட்டு உத்தியோகத்தரினால் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 50. | பேராதனை பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர் அமைப்பு / மாணவர் சங்கம் என்ற மாணவர்களின் விளக்கத்திற்காக காட்சிப்படுத்தப் பட்டுள்ள விளம்பரம் சிங்கள மொழி மூலம் மாத்திரம் காணப்படல் | இதற்கு பின்னர் அப் பல்கலைக்கழகத்தினால் காட்சிப்படுத்தப்படும் சகல விளம்பரங்களும் அரசகரும மொழிக் கொள்கைக்கமைய காட்சிப்படுத்தப்படுவதாக உபவேந்தரினால் அறிவித்தல். |
| 51 | அம்பாறை மாவட்டச் செயலாளரினால் முறைப்பாட்டாளர்களுக்கு விரிவான ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பாக கடிதம் சிங்கள மொழி மூலம் மாத்திரம் அனுப்பப்பட்டமை. | முறைப்பாட்டாளரின் குற்றப்பத்திரத்தில் தமிழ் பிரதி அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரினால் முறைப்பாட்டாளருக்கு விரிவான அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |

මගේ අංකය / எனது இல / My No: ஜேபீ/டி/ஒஎல்சீ/எப்ஏ/2012/10

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date: 2013 ஒக்டோபர் 29

தலைவர்

அரச கருமமொழிகள் ஆணைக்குழு

**அரச கருமமொழிகள் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

அரச கருமமொழிகள் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசெயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1991 இன் 18 ஆம் இலக்க அரச கருமமொழிகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 17(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2013 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச கருமமொழிகள் ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்க 07 இன் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள ரூபா 2,174,888 பெறுமதியான மோட்டார் வாகனம் மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி மீள்பெறுமதியிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

ரூபா 15,981,687 கூட்டுத்தொகையான ஆதனம், பொறி, உபகரணம் என்பன தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் பின்வரும் இனங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி 231 | ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏனைய ஏட்டினைப் பார்க்காது சரி பிழை பார்க்க முடியுமான வகையில் ஒவ்வொரு சேவை தொடர்பான தகவல்கள் கொடுப்பனவு உறுதிச்சான்றில் பதிவுசெய்யப் பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 264 | ஒவ்வொரு கொடுப்பனவும் உறுதிச் சீட்டில் குறிப்பிடப்பட்ட பணம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கு பணம் பெறுபவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய |

போதிலும் ரூபா 751,817 பெறுமதியான 11 கொடுப்பனவு உறுதிச்சான்றுகள் அத்தேவைப்பாட்டைப் பூர்த்திசெய்திருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 4,707,830 பற்றாக்குறையினை விளைவித்துள்ளதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,359,451 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 6,067,281 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெறுமானத்தேய்வு ரூபா 2,597,637 தொகையாலும் அரசாங்க மொழிக் கொள்கையை அமுல்படுத்தும் செலவு ரூபா 1,459,978 தொகையாலும் ஏனைய செலவுகள் ரூபா 1,547,759 தொகையாலும் அதிகரித்தல் மற்றும் வருமானம் ரூபா 461,907 தொகையால் குறைவடைதல் நிதிசார் விளைவுகளில் வீழ்ச்சிக்கு விசேடமாகத் தாக்கமளித்துள்ளது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| | 2012 | 2011 | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டுவரும் செலவுகளுக்காக அரசாங்க மானியம் | 10,997,000 | 11,450,000 | (453,000) |
| நானாவித வருமானம் | 6,314 | 27,838 | (21,524) |
| புத்தக விற்பனை வருமானம் | 6,502 | 379 | 6,123 |
| கடன் வட்டி | 46,485 | 39,991 | 6,494 |
| | 11,056,301 | 11,518,208 | (461,907) |

(ஆ) மீளாய்வண்டிற்கான செலவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 101 சதவீதத்திற்கும் 1,711 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடைய சதவீதத்தில் அதிகரித்திருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2012 | 2011 | வேறுபாடு | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செலவுகளின் அதிகரிப்பு சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | சதவீதம் |
| ஏனைய செலவுகள் | 196,303 | 87,374 | 108,929 | 125 |
| சொத்துக்களின் புதுப்பித்தலும் பராமரிப்பும் | 660,168 | 329,226 | 330,942 | 101 |
| அரசாங்க மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் | 3,764,782 | 1,755,812 | 2,008,970 | 114 |
| பெறுமானத் தேய்வு | 2,749,478 | 151,841 | 2,597,637 | 1,711 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் மொழி உரிமைகளை உள்ளடக்கும் 04 நிரந்தர விளம்பரப் பலகைகளை காட்சிப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு விளம்பரப் பலகை மாத்திரம் பொருத்தப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 200,000 செலவு செய்து மொழி உரிமை தொடர்பான விடயங்களை உள்ளடக்கும் இரண்டு மொழிகளில் தயாரிக்கப்பட்ட 50 நிரந்தரப் பலகைகள் அரசாங்க நிறுவனங்களில் காட்சிப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மொழி உரிமையை மீறுதல் தொடர்பாக ஆண்டின் போது 70 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் 21 முறைப்பாடுகளிற்கான விசாரணைகள் முடிவடைந்திருக்கவில்லை. அவற்றில் 16 முறைப்பாடுகள் 02 மாதங்களுக்கு மேற்பட்ட பழைமையானவையாகும்.

(ஈ) 29 மொழிக் கணக்காய்வுகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவை தொடர்பான இறுதி அறிக்கையை வழங்கும் போது 06 மாதங்களுக்கும்

அதிக காலம் தாமதித்திருந்ததுடன் இறுதி அறிக்கையை வழங்கியதன் பின்னர் அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை.

4.2 **சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 யூலை மாதத்தின் போது நடாத்தப்பட்ட புகையிரத ஒலிபரப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் போது சுய கற்கையினை மேற்கொள்ளக்கூடிய வகையில் பயன்படுத்துவதற்கு ஒலி ஒளி கூட்டிணைந்த நாடாவை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதில் ஒளிப்பதிவுப் பிரதியை தயாரிப்பதற்காக வழங்குனருக்கு பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 மே மாதம் வரை உரிய கூட்டிணைந்த நாடா சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புகையிரத திணைக்களத்தின் புகையிரத உதவியாளர்கள் மற்றும் பதிலீட்டு வேலையாளர்களுக்கு மும்மொழி ஒலிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 04 நாட்கள் பயிற்சி வழங்கப்பட்டிருந்த போதிலும் மொழி ஆற்றல் தொடர்பான அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சிக்காது அது இடம் பெற்றிருந்ததனால் எதிர்பார்த்த விளைவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

4.3 **பதவியணியினர் நிர்வாகம்**

ஆணைக்குழுவின் பதவியணியின் அங்கீகரித்த பதவிகள் 29 ஆக இருந்த போதிலும் அதில் 16 பதவிகள் 2012 திசெம்பர் 31 வரை வெற்றிடமாகக் காணப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| பதவி | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடமாக உள்ள பதவியணியினர் |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 03 | 01 | 02 |
| நிறைவேற்றுனர் அல்லாதவர்கள் | 20 | 07 | 13 |
| ஏனையவர்கள் | 06 | 05 | 01 |
| மோத்தம் | 29 | 13 | 16 |

5. **கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமும் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான பலவீனங்கள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருடாந்த செயலாற்றல்

டபிள்யு. பீ. சீ விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Nr/Sd*

# அரசகரும மொழிகள் ஆணைக்குழு

# நிதி அறிக்கை 2012

அரசகரும மொழிகள் ஆணைக்குழு, 4ம் மாடி "பாஷா மந்திரய" இராஜகிரிய

**அரசரும மொழிகள் ஆணைக்குழு**

**நிதி அறிக்கையின் நிலைமை**

2012 டிசம்பர் 31 வரை

| **சொத்துக்கள்** | **குறிப்பு** | **2011** | **2012** |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | **(ரூபா)** | **(ரூபா)** |
| காசு மற்றும் காசுக்கு சமனானவைள் | | 2,341,966.26 | 26,372.95 |
| பொருட்பதிவேடுகள் | **4** | 1,025,540.00 | 1,020,680.00 |
| முற்கொடுப்பனவுகள் | **5** | 53,320.00 | 43,680.00 |
| ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன் | **6** | 929,608.60 | 1,316,573.14 |
| தீர்க்கப்படாத உப கட்டுநிதி | | - | 7,694.00 |
| | | 4,350,434.86 | 2,415,000.09 |
| நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | **7** | 1,833,785.20 | 9,591,979.35 |
| **மொத்த சொத்துக்கள்** | | **6,184,220.06** | **12,006,979.44** |
| | | | |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| செலுத்தத்தக்கவை | **8** | 384,131.18 | 292,575.05 |
| பணிக்கொடையின் பொருட்டின் பங்கீடு | **9** | 775,994.37 | 898,139.87 |
| | | 1,160,125.55 | 1,190,714.92 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவைகள்** | | | |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 1,160,125.55 | 1,190,714.92 |
| **தேறிய சொத்துக்கள்** | | **5,024,094.51** | **10,816,264.52** |
| **தேறிய சொத்துக்கள் / பங்கு** | | | |
| திரண்ட நிலுவை / குறைவு | **10** | **5,024,094.51** | **10,816,264.52** |

நிதி அறிக்கையுடன் இணைக்கப்பட்ட குறிப்புக்கள் முழுமையான நிதி அறிக்கையின் ஒரு பகுதியாகும்.

நிதி அறிக்கைகள் இலங்கையின் பொது நிர்வாகப் பிரிவின் நிதி ஒழுங்கிற்கும் நிதிக் கட்டுப்பாட்டின் தேவைக்கும் மற்றும் அது தொடர்பான அரசாங்க சுற்றறிக்கைகளுக்கும் அமைவாக தயாரிக்கப்பட்டவையாகும்.

பணிப்பாளர் சபையானது இந்நிதி அறிக்கையினை அமைத்தல் மற்றும் முன்வைத்தலுக்கு பொறுப்புடையதாகும். பணிப்பாளர் சபை தொடர்பாக மற்றும் அதன் பொருட்டு கையெழுத்திடல்

| | | |
|---|---|---|
| .................................. | .................................... | ................................. |
| நிமல் ஆர். ரணவக்க<br>தலைவர் | பணிப்பாளர் | கே.ஏ.சி.சமந்தா<br>கணக்கு மேற்பார்வையாளர் |

**அரசரும மொழிகள் ஆணைக்குழு**

**நிதி அறிக்கையின் நிலைமை**

2012 டிசம்பர் 31 வரை

| **வருமானம்** | **குறிப்பு** | **2011** | **2012** |
|---|---|---|---|
| | | **(ரூபா)** | **(ரூபா)** |
| திறைசேரியிலிருந்து மாற்றப்பட்ட மீள்கடன் | | 11,450,000.00 | 10,997,000.00 |
| ஏனைய வருமானம் | **11** | 68,208.10 | 59,301.10 |
| **மொத்த வருமானம்** | | 11,518,208.10 | 11,056,301.10 |
| **செலவுகள்** | | | |
| சம்பளங்களும் கூலிகளும் மற்றும் ஊழியர் அனுகூலம் | **12** | 5,831,323.38 | 6,334,836.37 |
| வழங்கல் மற்றும் பயன்பாட்டுப் பாவனைகள் | **13** | 565,262.59 | 1,141,444.27 |
| பெறுமானத் தேய்வு | **7** | 151,840.55 | 2,749,477.85 |
| திருத்தலும் பராமரித்தலும் | **14** | 329,225.52 | 660,167.56 |
| பயன்பாட்டு மற்றும் பிறசேவைகள் | **15** | 788,926.18 | 817,120.01 |
| ஏனைய செலவுகள் | **16** | 87,374.00 | 196,302.75 |
| அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான நிகழ்ச்சித் திட்டங்கள் | **17** | 2,304,804.00 | 3, 764,782.28 |
| கணக்காய்வு கட்டணம் | | 100,000.00 | 100,000.00 |
| **மொத்த செலவுகள்** | | 10,158,756.22 | 15,764,131.09 |
| **காலத்தினுள் நிலுவை / குறைவு** | | **1,359,451.88** | **(4,707,829.99)** |

நிதி அறிக்கையுடன் இணைக்கப்பட்ட குறிப்புக்கள் முழுமையான நிதி அறிக்கையின் ஒரு பகுதியாகும்.

**அரசரும மொழிகள் ஆணைக்குழு**

**நிதி அறிக்கையின் நிலைமை**

2012 டிசம்பர் 31 வரை

| | திறைசேரியிலிருந்து கிடைத்த மூலதன மானியம் | திறைசேரியிலிருந்து கிடைத்த மீள்கடன் மானியம் | மொத்த திறைசேரி மானியங்கள் | நன்கொடை முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியம் | திரண்ட நிதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **2010 திசெம்பர் 31ல் மீதி** | | | | | 2,690,267,63 | 2,690,267.63 |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலதன மானியம் | 975,000.00 | | | | | 975,000.00 |
| **கடந்த வருட சீராக்கம்** | | | | | | |
| மீளப் பெற்ற விழா முற்பணம் | | | | | (625.00) | (625.00) |
| 2011ம் வருடத்திற்கான நிலுவை / குறைவு | | | | | 1,359,451.88 | 1,359451.88 |
| **2011திசெம்பர் 31ல் மீதி** | **975,000.00** | | | | **4,049,094.51** | **5,024,094.51** |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலதன மானியம் | 10,500,000.00 | | | | | 10,500,000.00 |
| **கடந்த வருட சீராக்கம்** | | | | | | |
| 2012ம் வருடத்திற்கான நிலுவை / குறைவு | | | | | (4,707,829.99) | (4,707,829.99) |
| **2012திசெம்பர் 31ல் மீதி** | **11,475,000.00** | **-** | **-** | **-** | **(658,735.48)** | **10,816,264.52** |

நிதி அறிக்கையுடன் இணைக்கப்பட்ட குறிப்புக்கள் முழுமையான நிதி அறிக்கையின் ஒரு பகுதியாகும்.

**அரசரும மொழிகள் ஆணைக்குழு**

**நிதி அறிக்கையின் நிலைமை**

2012 டிசம்பர் 31 வரை

| | குறிப்பு | 2011 (ரூபா) | 2012 (ரூபா) |
|---|---|---|---|
| **செயற்பாட்டிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல்** | | | |
| நிலுவை / குறைவு | | 1,359,451.88 | (4,707,829.99) |
| **நடைமுறை அல்லாத இயக்கம்** | | | |
| பெறுமானத் தேய்வு | 7 | 151,840.55 | 2,749,477.85 |
| முற் கொடுப்பனவுகளின் அதகரிப்பு / குறைப்பு | | (26,420.00) | 9,640.00 |
| பொருட் பதிவேடுகளின் அதகரிப்பு / குறைப்பு | | 1,415.00 | 4,860.00 |
| செலுத்தப்பட்ட கன் முற்பணத்தில் அதகரிப்பு / குறைப்பு | | (49,469.40) | (386, 964.54) |
| உபகட்டு நிதியில் அதகரிப்பு / குறைப்பு | | - | (7,694.00) |
| செலுத்தத்தக்கவற்றில் அதகரிப்பு / குறைப்பு | | 11,235.96 | (91,556.13) |
| பணிக்கொடை பங்கீடுகளில் அதகரிப்பு / குறைப்பு | | (101,170.00) | 122,145.50 |
| கணக்காய்வுக் கட்டணம் செலுத்தத்தக்கவற்றில் அதகரிப்பு / குறைப்பு | | 100,000.00 | |
| செலுத்தத் தக்க வைப்பில் அதகரிப்பு / குறைப்பு | | (238,756.81) | - |
| **செயற்பாட்டு முயற்சிகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | | **1,208,127.18** | **(2,307,921.31)** |
| **முதலீட்டு முயற்சிகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | | | |
| கொள்வனவு செய்யப்பட்ட பொறித் தொகுதி மற்றும் இயந்திரம் | 7 | (225,422.50) | (10,507,672.00) |
| **முதலீட்டு முயற்சிகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | | (225,422.50) | (10,507,672.00) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலதன மானியம் | | 975,000.00 | 10,500,000.00 |
| நன்கொடை முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றவை | | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | 975,000.00 | 10,500,000.00 |
| **காசு மற்றும் காசுக்குச் சமனானவையில் தேறிய அதிகரிப்பு / குறைப்பு** | | **1,957, 704.68** | **(2,315,593.31)** |
| **வருட முற்பகுதியில் காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | | **384,261.58** | **2,341,966.26** |
| **வருட இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | | **2,341,966.26** | **26,372.95** |

நிதி அறிக்கையுடன் இணைக்கப்பட்ட குறிப்புக்கள் முழுமையான நிதி அறிக்கையின் ஒரு பகுதியாகும்.

**அரசரும மொழிகள் ஆணைக்குழு**
**நிதி அறிக்கையின் நிலைமை**
2012 டிசம்பர் 31 வரை

## 1. அறிக்கையிடும் நிறுவனங்கள்

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவானது 1991 ஆம் ஆண்டின் 18ம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் சட்டமயமாக்கப்பட்ட முழுமையாக அரசுடைமையான சட்டவாக்கப்பட்ட நிறுவனமாகும். ஆணைக்குழுவானது தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வழிகாட்டலில் கட்டுப்படுகிறது. ஆணைக்குழுவின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இராஜகிரிய கோட்டே வீதி இல: 341/7, என்னும் முகவரியிலான பாஷா மந்திரவின் 4ம் தளத்தில் அமைந்துள்ளது.

### 1.1. பிரதான நோக்கங்களும் நெறிப்படுத்தல் நடவடிக்கைகளின் தன்மையும்

அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது குறித்து மேற்பார்வை செய்தலே அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் அடிப்படை நோக்கமாகும்.

### 1.2. ஊழியர் எண்ணிக்கை

2012 டிசம்பர் 31ம் திகதியன்று ஆணைக்குழுவில் இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 14 ஆகும். (2011-2015) 2012 ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட பணிக்குழுவினர் 29 பேர் ஆவர் (2013-29)

### 1.3. நிதிக்கூற்றுத் தொடர்பான பொறுப்பு

நிதிக்கூற்றைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிக்கும் பொறுப்பை பணிப்பாளர் குழு ஏற்கிறது.

## 2. தயாரித்தலுக்கான அடிப்படை

### 2.1. உடன்படுதல் / முரண்படாமை குறித்த கூற்று

நிதி நிலவரம் தொடர்பான கூற்று, நிதி செயலாற்றுகை அறிக்கை, நிதிப் பாய்ச்சல் கூற்றிற்குரிய குறிப்புக்கள் என்பன நிதிக் கூற்றில் உள்ளடங்குகின்றன. நிதி திட்டமிடல் அமைச்சு, கணக்காய்வாளர் திணைக்களத்துடன் இணைந்து இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தரங்களுக்கும் மற்றும் நிதி ஒழுங்கு விதிகளுக்கும் உரிய அரசாங்க சுற்று நிருபங்களின் தேவைப்பாடுகளுக்கும் இணங்க கணக்குக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.2. அளவீடுகள் / மதிப்பீடுகள் அடிப்படை

1983ஆம் ஆண்டின் 12ம் இலக்க பணிக்கொடையை அடிப்படையாகக் கொள்ளும் ஊழியர் ஓய்வு பணிக்கொடை தவிர்ந்த நிதிக் கூற்றைத் தயாரித்தலானது வரலாற்று ஆகுசெலவை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 2.3. அங்கீகரிக்கப்பட்ட பணப்புழக்கம்

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**2.4. மதிப்பீட்டு பாவனையும் தீர்மானமெடுத்தலும்**

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் மதிப்பீடுகளை தயாரித்தல், தீர்மானமெடுத்தல், கணக்கீட்டுக் கொள்கைகளை ஏற்புடையதாக்கல், அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன வருமானங்கள் மற்றும் செலவினங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதை ஒப்புக் கொண்டு முகாமைத்துவத்தினால் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் அவசியமாகும். வரலாற்று அனுபவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப நியாயமானது எனக் கருதும் ஏனைய காரணிகளை அடிப்டையாகக் கொண்டே மதிப்பீடுகளும் அவற்றை ஒப்புக் கொள்ளலும் மேற்கொள்ளப்படுகின்றது. மதிப்பீடுகளும் உண்மை பெறுபேறுகளும் மாற்றமடையலாம். மதிப்பீடுகளில் காட்டப்பட்டுள்ள விசேட துறைகளிலும் நிதிக் கூற்றில் இனங்காணப்பட்ட இலக்கங்கள் மீதும் பெரிதும் தாக்கம் செலுத்தும், கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தும் ஆபத்துக்குரிய தகவல்கள் பின்வருமாறு

ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடு (குறிப்பு 9)

சொத்துக்கள் சேதம் (குறிப்பு 3.1)

**2.5. பொருட்கள் மற்றும் ஒன்று திரட்டல்**

ஒவ்வொரு வகையையும் சார்ந்த ஒரே மாதிரியான பொருட்கள் வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளன. சமமற்ற வகைகளுக்கு பொருட்கள் அல்லது பணிகள் முக்கியத்துவமற்ற / கவனத்திற் கொள்ளத் தேவையற்ற / பொருள் அல்லாதவையாயின் வேறுபடுத்தி காட்டப்பட்டுள்ளன.

**2.6. ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள்**

நடைமுறை வருடத்தில் சமர்ப்பிப்பதற்காக ஏற்புடைய சந்தர்ப்பங்களில் மீளாய்வு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**3. அதிவிசேடமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

கணக்கீட்டுக் கொள்கைகள் கடந்த வருடங்களில் பயன்படுத்தப்பட்டவற்றோடு நேரொத்திருப்பதோடு நிறுவனத்தினால் பொருத்தமானவாறு ஏற்புடையதாக்கப்பட்டுள்ளது.

**3.1. சொத்துக்கள் மற்றும் மதிப்பீடு செய்யும் அடிப்படை**

சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

கொள்வனவு செய்வதன் மற்றும் நிர்மாணித்தலில் பெறுமதியும் அதற்குரிய அமையச் செலவுகளையும் உள்ளடக்கியே சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கீழே காட்டப்பட்டுள்ள அடிப்படையில் மொத்த தேய்மானம் கழிக்கப்பட்டதன் பின்னரே இச் சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி அவற்றைக் கைப்பற்றுவதற்கு நேரடியாக உள்ளடக்கக்கூடிய செலவுகளும் உள்ளடங்கும்.

திறைசேரியினாலோ அல்லது வேறு ஒரு நிறுவனத்தினாலோ மாற்றப்பட்டிருந்தால் அந் நிறுவனத்தினால் அச் சொத்துக்களை கைப்பற்றுவதற்காக செலவிடப்பட்ட தொகையை மீளக் கணக்கிடும் பெறுமதியின் பேரில் பயன்படுத்துவதாயின் அப்பெறுமதி அல்லது சொத்துக்களின் பெறுமதியாக குறிப்பிடப்படும்.

பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள முழுமையாக தேய்வடைய செய்திருப்பினும் ஆணைக்குழுவின் பயன்பாட்டிற்காக மீளவும் மதிப்பிடல் அல்லது வாழ் நாளை மதிப்பிட முடியாத காரணத்தினால் சேதமடைந்துள்ளது. இருப்பினும் இவ்வாறான வகைகளைச் சார்ந்த பொருட்கள் குறித்த விபரங்கள் நிதிக்கூற்றில் குறிப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தேய்வடையச் செய்தல்

சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்களின் அனைத்து உறுப்புக்களும் / பகுதிகளும் மதிப்பீடு செய்யப்பட்ட பாவனைக் காலத்தின் பேரில் இலாப, நட்ட முறையில் எளிய வரிசைமுறை அடிப்படையில் தேய்வடையச் செய்யும் முறை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கொள்வனவு செய்த வருடத்தின் விலையை அடிப்படையாகக் கொண்டு முழு ஆண்டிற்குமான தேய்வடைவை மேற்கொள்ளலேயன்றி கடத்தப்படும் ஆண்டின் தேய்வடைவை மேற்கொள்ளாமையே ஆணைக்குழுவின் கொள்கையாகும்.

நடைமுறை ஆண்டினதும் ஒப்பீட்டு ஆண்டினதும் வினைத்திறனான பாவனைக்காலம் பின்வருமாறு

சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள் - 05

அலுவலக உபகரணங்கள் - 10 வருடங்கள்

மோட்டார் வாகனங்கள் - 04 வருடங்கள்

2013 டிசம்பர் மாதத்திலேயே கணினி கொள்வனவு செய்யப்பட்டுள்ளமையால் அவ்வருடத்திற்கான தேய்மானம் செய்யப்படவில்லை.

3.2. பொருட்பதிவேடு

மதிப்பீடு செய்யப்பட்ட பூர்த்தி செய்தலுக்கான செலவினங்கள் மற்றும் விற்பனைக்கான செலவினங்களை கழித்ததன் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை விலையே பொருட்பதிவேடுகளில் தேறிய பெறப்பட்ட தொகையாகும். ஆணைக்குழுவின் வெளியீடுகளும் பொருட் பதிவேடுகளில் உள்ளடங்கும் வெளியீடுகளின் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் விற்பனை விலையே பெறப்பட்ட விலையாகும். விற்பனைக்காக ஆகுசெலவொன்றை அனுமதிக்கவோ ஏற்கவோ நேரிடாது.

3.3. முற்கொடுப்பனவுகளும் செலத்த வேண்டிய தொகையும்

முற்கொடுப்பனவுகளும் செலுத்த வேண்டிய தொகையும் உண்மையில் செலவிடப்பட்ட ஆகுசெலவாகவும் ஒப்பந்தமொன்றின் கீழ் செலவிடப்பட்ட ஆகுசெலவொன்றாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.4. ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள்

ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் ஆகுசெலவுகளின் பிரகாரம் குறிப்பிட்டுள்ளது அனுமதி வழங்கப்படாது என்பதனால் அறவிடமுடியாக் கடனுக்கு அல்லது மீளப்பெறமுடியாத கடனுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

3.5. பணிக்கொடைக்கான ஒதுக்கீடு

1983ஆம் ஆண்டின் 12ம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கு அமைவாக பணிக்கொடைக்கான ஒதுக்கீடு கணக்கிடப்படும். சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் இறுதி மாதத்தின் அடிப்படைச் சம்பளத்தில் அரைவாசியானது வருடத்தின் ஒதுக்கீடாக ஒதுக்கப்படும்.

3.6. வருமானம்

திறைசேரியினால் மீண்டுவரும் செலவினங்களுக்காக விடுக்கப்படும் கட்டுநிதியானது வருமானமாக ஏற்றுக் கொள்ளப்படும். மூலதனச் செலவிற்கான கட்டுநிதி அல்லது நேரடியாக மாற்றம் செய்யப்படும் மூலதனச் சொத்துக்கள், ஆணைக்குழுவின் மொத்த கட்டுநிதிக்காக நேரடியாக மூலதனத்திற்கு மாற்றலாக ஏற்றுக் கொள்ளப்படும்.

3.7. செலவுகள்

நேரடியாக செலவை ஏற்கும் அடிப்படையின் கீழ் செலவிடப்படும் ஆகுசெலவு மற்றும் அவை தீர்மானிக்கப்பட்ட பொருட்களுக்கு வருமானமாகப் பெறும் வருவாயானது நிதி செயலாற்றுகை கூற்றின் செலவுகளாக ஏற்றுக் கொள்ளப்படும். ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை செயற்படுத்தி மேற்கொள்வதற்கான அனைத்து செலவுகளும் சொத்துக்களும், பொறித்தொகுதிகளையும் இயந்திர உபகரணங்களையும் பராமரிப்பதற்கான அனைத்து செலவுகளும் மற்றும் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து செலவுகளும் நிதிசெயலாற்றுகைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.8. நிதிப் பாய்ச்சல் கூற்று

அமைய முறைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது.

## 4. பொருட் பதிவேடுகடளின் வெளியீடுகள்

| வெளியீடுகளின் பெயர்கள் | 2011 | 2012 |
|---|---|---|
| ஆங்கிலம் சிங்களம் அகர முதலிகள் | 93,950.00 | 93,050.00 |
| தமிழ் ஆங்கிலம் அகர முதலிகள் | 44,010.00 | 43,290.00 |
| தமிழ் விஷேட அகர முதலிகள் | 630.00 | 630.00 |
| 40 மணித்தியால அடிப்படை பயிற்சி புத்தகம் | 886,950.00 | 883,710.00 |
| **மொத்தம்** | **1,025,540.00** | **1,020,680.00** |

## 5. முற்கொடுப்பனவு

| | 2011 | 2012 |
|---|---|---|
| பத்திரிகைகள் மற்றும் பருவகால இதழ்கள் | 53,320.00 | 43,680.00 |
| | **53,320.00** | **43,680.00** |

## 6. ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட கடன் முற்பணம்

| கடன் முற்பண வகை | 31.12.2011 மீதி | மேலதிகமாக | கிடைக்கப்பெற்ற மூலதனம் | 31.12.2012 மீதி |
|---|---|---|---|---|
| விழா முற்பணம் | - | 40,000.00 | 40,000.00 | - |
| இடர் முற்பணம் | 929,608.60 | 572,671.00 | 188,706.46 | 1,317,573.14 |
| விஷேட முற்பணம் | - | 10,000.00 | 11,000.00 | (1,000.00) |
| **மொத்தம்** | **929,608.60** | **626,671.00** | **239,706.46** | **1,316,573.14** |

## 7. ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணம்

### 7.1 பெறுமதி அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதி

| விபரம் | 31.12.2011 மீதி | மேலதிகமாக | இக்காலத்தில் அகற்றப்பட்டவை | 31.12.2012 மீதி |
|---|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | 1,835,250.00 | 10,500,000.00 | - | 12,335,250.00 |
| பொறித் மற்றும் இயந்திரம் | 339,637.75 | 7,672.00 | - | 347,309.75 |
| அலுவலக உபகரணம் | 3,299,126.90 | - | - | 3,299,126.90 |
| **மொத்த பெறுமதி மதிக்கப்பட்ட பெறுமதி** | **5,474,01.65** | **10,507,672.00** | **-** | **15,981,686.65** |

### 7.2 திரண்ட பெறுமானத் தேய்வு

| | | | | |
|---|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | 1,835,250.00 | 2,625,000.00 | - | 4,460,250.00 |
| பொறித் மற்றும் இயந்திரம் | 339,637.75 | 1,534.40 | - | 341,172.15 |
| அலுவலக உபகரணம் | 1,465,341.70 | 122,943.45 | - | 1,588,285.15 |
| **மொத்த பெறுமானத் தேய்வு** | **3,640,229.45** | **2,749,477.85** | **-** | **6,389,707.30** |

### 7.3 தேறிய புத்தக பெறுமதி **1,833,785.20** **9,591,979.35**

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு**

**நிதி அறிக்கையின் நிலைமை**

2012 டிசம்பர் 31 வரை

**8. செலுத்தத்தக்கவை**

| | **2011 (ரூபா)** | **2012 (ரூபா)** |
|---|---|---|
| மீளளிக்கப்படக் கூடிய வைப்பு | - | 1,335.00 |
| முன்வைக்கப்படாத காசோலைகள் | - | 21,951.00 |
| மின்சாரப்பட்டியல் | - | 33,228.00 |
| விளம்பரப்படுத்தல் | 40,000.00 | 20,160.00 |
| பிரயாணச் செலவு | 196.00 | 5,725.00 |
| தொலைபேசி பட்டியல் | - | 19,925.77 |
| வாடகை வாகன கட்டணம் | 20,762.00 | - |
| வாகனத் திருத்தம் | 33,185.00 | - |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 25,740.18 | 1,799.28 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி | 14,248.00 | - |
| செலுத்தத்தக்க கணக்காய்வு கட்டணம் | 250,000.00 | 188,451.00 |
| | **384,131.18** | **292,575.05** |

**9. பணிக்கொடை ஏற்பாடு**

| | **2011 (ரூபா)** | **2012 (ரூபா)** |
|---|---|---|
| முன் கொண்டு வரப்பட்ட மீதி | 877,164.37 | 775,994.37 |
| இவ்வாண்டு சேர்க்கை | 115,420.00 | 122,145.50 |
| இவ்வாண்டு கொடுப்பனவு | (216,590.00) | - |
| **முன்னெடுக்கப்பட்ட மீதி** | **775,994.37** | **898,139.87** |

**10. திரண்ட நிதியம்**

| | **2011 (ரூபா)** | **2012 (ரூபா)** |
|---|---|---|
| முன் கொண்டு வரப்பட்ட மீதிக்கு முன்னரான முந்திய ஆண்டுக்கான சீராக்கல் | 2,690,267.63 | 5,024,094.51 |
| கூட்டுக. | | |
| திறைசேரியால் கிடைக்கப்பெற்ற மூலதன செலவுகள் | 975,000.00 | 10,500,000.00 |
| கொண்டுவரப்பட்ட மீதிக்கு முன்னரான முந்திய ஆண்டுக்கான சீராக்கம் | 3,665,267.63 | 15,524,094.51 |
| முந்திய வருடத்திற்காக கிடைக்கப்பெற்ற விழா முற்பணம் | (625.00) | - |
| திரண்ட நிதியத்துக்கு முன்னராக நிலுவை / குறைவு | 3,664,642.63 | 15,524,094.51 |
| வருடத்திற்கான நிலுவை / குறைவு | 1,359,451.88 | (4,707,829.99) |
| **முன்னெடுக்கப்பட்ட மீதி** | **5,024,094.51** | **10,816,264.52** |

**11. பிற இறைவரி**

| | | |
|---|---|---|
| ஊழியர் கடன் வட்டி | 39,990.80 | 46,484.69 |
| வெளியீடுகளின் விற்பனைகள் | 379.00 | 6,502.00 |
| நானாவித வருமானம் | 27,838.30 | 6,314.41 |
| | **68,208.10** | **59,301.10** |

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு**

**நிதி அறிக்கையின் நிலைமை**

2012 டிசம்பர் 31 வரை

## 12. சம்பளங்கள் கூலிகள் மற்றும் ஊழியர் அனுகூலங்கள்

| | **2011 (ரூபா)** | **2012 (ரூபா)** |
|---|---|---|
| சம்பளங்களும் கூலிகளும் | 3,511,653.12 | 3,692,079.12 |
| ஊ.சே.நிதி பங்களிப்பு | 505,280.74 | 504,277.24 |
| ஊ.ந.நிதி பங்களிப்பு | 126,320.18 | 125,998.53 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 362,917.14 | 481,001.83 |
| சம்பளப் படிகள் | 1,101,487.30 | 987,285.00 |
| பணிக்கொடை செலவுகள் | 115,420.00 | 122,145.50 |
| விஷேட சம்பளபடிகள் | 108,244.90 | 410.049.15 |
| அலுவலக உதவியாளர்களுக்கான நிழற்பிரதி படிகள் | - | 12,000.00 |
| | **5,831,323.38** | **6,334,836.37** |

## 13.வழுங்கல்கள் மற்றும் பயன்பாட்டு பாவனை

| | | |
|---|---|---|
| எழுதுகருவிகள் | 172,758.18 | 446,013.77 |
| சீருடை | 12,360.00 | 15,445.00 |
| பத்திரிகைகள் மற்றும் பருவகால இதழ்கள் | 64,310.00 | 112,344.00 |
| எரிபொருளும் உராய்வு நீக்கியும் | 315,834.41 | 567,641.50 |
| | **565,262.59** | **1,141,444.27** |

## 14. திருத்தலும் பராமரித்தலும்

| | | |
|---|---|---|
| வாகன வாடகை கட்டணம் | 160,000.00 | 459,238.00 |
| கட்டிட பராமரிப்பு | 10,780.00 | - |
| அலுவலக உபகரண பராமரிப்பு | 49,830.52 | 54,063.12 |
| கணினி திருத்தம் | 9,650.00 | 17,300.00 |
| மோட்டார் வாகன திருத்தம் | 98,965.00 | 22,471.94 |
| காப்புறுதி மற்றும் அனுமதிப்பத்திரம் | - | 107,094.50 |
| | **329,225.52** | **660,167.56** |

## 15. உபயோகங்கள் மற்றும் பிறசேவைகள்

| | | |
|---|---|---|
| தொலைபேசி, மின்னஞ்சல் மற்றும் இணையத்தளம் | 175,590.52 | 217,198.35 |
| மின்சாரம் | 346,395.27 | 352,528.68 |
| துப்பரவு சேவைகள் | 143,535.02 | 143,911.98 |
| தபால் கட்டணம் | 25,975.00 | 103,481.00 |
| பிற | 97,430.37 | - |
| | **788,926.18** | **817,120.01** |

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு**

**நிதி அறிக்கையின் நிலைமை**

2012 டிசம்பர் 31 வரை

## 16. பிற செலவுகள்

| | 2011 (ரூபா) | 2012 (ரூபா) |
|---|---|---|
| புத்தக விற்பனையால் ஏற்பட்ட செலவு | - | 4.860.00 |
| பிரயாணம் | 87,374.00 | 165,661.50 |
| சில்லறைச் செலவுகள் மற்றும் பிற செலவுகள் | - | 25,781.25 |
| | **87,374.00** | **196,302.75** |

## 17. அரசகரும மொழிக் கொள்கை நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தல்

| | 2011 | 2012 |
|---|---|---|
| ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடு | - | 2,509.50 |
| பயிற்சி | 118,100.00 | 168,292.50 |
| வெளிக்கள விஜயம் | 195,792.00 | 344,130.50 |
| பயிற்சி பட்டறைகளும் செயலமர்வுகளும் | 922.457.00 | 262,725.50 |
| பணிக்குழு பயிற்சி | 270,529.50 | - |
| சபை கூடும் செலவுகள் | 4,500.00 | 435,971.00 |
| பிற | 244,433.00 | 25,240.70 |
| விளம்பரங்கள் | 548,992.50 | 968,903.78 |
| மொழிபெயர்ப்புச் செலவுகள் | - | 242,569.80 |
| சீடா கனடா சுற்றுலா செலவுகள் | | 30,480.00 |
| தேசத்திற்கு மகுடம் செலவுகள் | | 1,283,959.00 |
| | **2,304,804.00** | **3,764,782.28** |